# தாமிரபரணி புஷ்கர புண்ணிய நீராடல் ஸங்கல்பம்

(ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் உத்தரவுபடி வெளியிடப்பட்டது)

நான் சேர்த்திருக்கும் அனைத்து பாபங்களும் நீங்குவதன் மூலம் இறைவன் என்னிடம் மகிழ்வதற்கும்,

ப்ரளய ஜலத்தில் சயனித்து இருப்பவனும் பரமேச்வரனுமான இறைவனின் மனதிற்கெட்டாத அளவற்ற சக்தியால் அந்த ப்ரளய சமுத்திரம் தாங்கப்பட்டிருக்கிறது. அதன்கண் சுழன்றுகொண்டிருக்கும் பல கோடி ப்ரம்மாண்டங்கள் இடையில் ஒரு ப்ரம்மாண்டத்தில் நாம் இருக்கிறோம். அதிலும் உள்ள பதினான்கு உலகங்களில் ஒன்றான பூமியில் ஏழு பெரும் தீவுகள் இடையே ஜம்பூ த்வீபம் என்னும் தீவினில் அதன் உட்பிரிவான பாரத வர்ஷம் என்பதில் அதன் உட்பிரிவான பரத கண்டம் என்பதில் உள்ளோம். இங்கு ஹிமாலயம், கைலாஸம், விந்தியம் முதலிய பல புண்ணிய மலைகள் உள்ளன. தண்டகாரண்ணியம் விந்தியாரண்ணியம் வேதாரண்ணியம் முதலிய பல புண்ணிய காடுகள் உள்ளன. அவற்றால் பொலியும் இந்த தேசத்தில் -

பிரியமான தாய்கள் குழந்தைகளைக் காப்பது போல் சத்து மிகுந்த நீரினால் மக்களை வளர்க்கும் புண்ணிய நதிகளுள் ஒருவள் தாமிரபரணி நதி. இவள் -

1. தமிழ்நாட்டில் மலய பர்வதத்தின் பகுதியான அகஸ்த்ய மலையில் உருவாகி திருசெந்தூர் அருகே ஸமுத்ரம் சென்றடைகிறாள்.

2. பராம்பிகையின் கழுத்தில் மாலை வடிவமாக இருந்தாள். அவளால் (தனது மறு வடிவமான) பார்வதி சிவனாரின் திருமணத்திற்கு முன்பு அருளப்பட்டாள். பார்வதியால் சிவனாரில் கழுத்தில் அணிவிக்கப்பட்டாள். அச்சமயம் உலகம் நிலைகுலைந்ததைச் சரி செய்ய சிவனாரால் உத்தரவிடப்பட்ட அகஸ்த்யருக்கு ப்ரஸாதமாக கொடுக்கப்பட்டாள். அவரைச் சென்றடைந்தவுடன் அழகிய இளம்பெண்ணாக வடிவெடுத்தாள்.

3. அகஸ்த்யரால் தம்முடன் தென்னாட்டிற்கு அழைத்துவரப்பட்டு மலயபர்வத தேவனிடம் மகளாக ஒப்படைக்கப்பட்டாள். அப்பர்வதத்தில் உள்ளடங்கிய ரகசிய சிகரம் ஒன்றில் உள்ள சந்நிதியிலிருந்து இறைவியால் "மகாநதியே, பாய்வாயாக!" என்று பாராட்டி தூண்டப்பட்டாள்.

4. திரிகூடம் என்னும் குற்றால மலையில் தன்னின்றும் உருவாகிய மணிகளில் காணப்பட்ட தனது நிழல்வடிவத்திலிருந்து சித்ரா (சித்தாறு)

என்னும் துணை நதியையும், அனைத்து விருப்பங்களையும் தரவல்ல கடனா நதியையும் உருவாக்கினாள். அம்பிகையின் மற்றொரு அம்சமாக அவதரித்த ச்யாமா (பச்சையாறு) மற்றும் வருணனின் பாச (கயிறு) ஆயுத சக்தியின் அம்சமான பாசவதி (கயிற்றாறு) என்ற துணை நதிகளுடன் கூடுகிறாள்.

5. இவளிடம் அனைத்து தேவதைகளும் நதிகளும் அடக்கம் என்று ஹயக்ரீவர் போற்றியுள்ளார். கங்கா தேவியும் “நானே தாமிரபரணி” என்று தன்னைக்காட்டிலும் வேறல்ல என்று இவளைப் பாராட்டியிருக்கிறாள்.

6. தக்ஷிண காஞ்சி என்று புராண ப்ரஸித்தி பெற்ற திருநெல்வேலியில் அகஸ்த்யர் இவளைப் பூஜித்தார். அச்சமயம் தேவர்கள் கந்தர்வர்கள் முதலியோர் பூமாரி பொழிய அவ்விடம் “சிந்துபூந்துறை” எனப்பட்டது. யம தர்மராஜனே தன் தலைமீது கைகூப்பி இவளை வணங்கி எல்லா புறத்திலிருந்தும் இவள் தன்னைக் காக்க வேண்டும் என்று வணங்கியுள்ளார். இவளது தீரத்தில் தான் கல்கி அவதாரம் ஏற்படும் எனக்கருதப்படுகிறது.

7. பாபநாசத்தில் இவள் சிவனைப் பூஜித்தாள். குற்றாலத்தில் சிவனாரின் சித்திர சபையும், திருநெல்வேலி அருகே தாமிர சபையும் உள்ளன. அனாதியான ஜோதி ஒளிரும் காடாகிய செவல் என்ற ஊரில் முருகனார் சிவ லிங்கத்தை ஸ்தாபித்தார். மேலும் திருப்புடைமருதூர், (கச்யபர் சிவனைப் பூஜித்த) அம்பாசமுத்திரம், (அகஸ்த்யர் சிவனைப் பூஜித்த) ஊர்க்காடு முதலியவை, நவ கைலாய தலங்கள், இப்படி பற்பல சிவத்தலங்கள் இவளது கரைகளில் அமைந்துள்ளன.

8. உலகைப் படைப்பதற்கு முன்பும் பின்பும் ப்ரஹ்மா விஷ்ணுவை சேரன்மாதேவி, ஸ்ரீவைகுண்டம் ஆகிய தலங்களில் பூஜித்தார். உறங்கா புளிய மர வடிவில் லக்ஷ்மணர் தவம் செய்த இடமான திருநகரியில் மஹாவிஷ்ணு தாயாருடன் க்ருஹஸ்த வாழ்க்கை நடத்தினார். கஜேந்த்ரனுக்கு (அத்தாழ-நல்லூரில்) மோக்ஷம் கிடைத்தது. சீவலப்பேரி, கருங்குளம், நவ திருப்பதிகள், இப்படி பற்பல விஷ்ணு ஸ்தலங்கள் இங்கு உள்ளன.

9. த்ரிபுர ஸம்ஹாரத்திற்குப் பிறகு அம்பு வடிவமெடுத்த விஷ்ணுவின் உஷ்ணம் (காரையார் பாண தீர்த்தத்தில்) தாமிரபரணியினால் தணிந்தது. அஸுரர்களுடன் யுத்தம் செய்த துர்க்கையின் உடல் தாபம் (காருக்குறிச்சியில்) தணிந்தது. ஸனகர், வாமதேவர், சங்கர், ரோமசர் முதலிய ருஷிகளும் ப்ரமோதன், சிவதர்மன், காஞ்சநமாலினி போன்ற மஹான்கள் இவளது கரைகளில் தவம் செய்து சித்தி பெற்றனர்.

10. விஷ்ணு சக்ரமான ஸுதர்சனரும், ப்ரஹ்மாவின் தண்ட தேவதையும்,

சந்திரனும், ஹாஹா ஹூஹூ முதலிய கந்தர்வர்களும், துர்வாஸ மஹர்ஷியும், (கும்பீநஸீ, சதானந்தன் ஆகிய) அந்தண இளைஞர்கள் முதலியவர்களும், வஸுமனஸ், மானஸாங்கன் முதலிய அரசர்களும், வ்யாஸரின் வேண்டுதலால் கங்கை முதலிய நதிகளும் கூட இவளிடம் தத்தமது பலவித தோஷங்கள் நீங்கப்பெற்றனர்.

11. முதன்முதல் அனுக்ரஹமாக இவள் செய்தது குந்தலா என்பவளின் கணவனை உயிர்ப்பித்தது. கசாவதி, தேவலேகை முதலியவர்களுக்கும் இவள் ஸௌமங்கல்யத்தை அளித்தாள். நந்திகேச்வரரின் தாயாரின் சாபத்தை நீக்கி சிவபக்தர்களுள் தலையாயவனான மகனை அளித்தாள். தேவமாதாவான அதிதிக்கு அவளது மக்கள் செல்வச்செழிப்புடன் இருக்கும்படிச் செய்தாள்.

இத்தகைய பல வித குணங்கள் கூடிய இந்த தாமிரபரணி மஹாநதியில், சிவன் விஷ்ணு முதலிய அனைத்து தெய்வங்களின் ஸந்நிதியில், குருமார்கள் மற்றும் வேதியர்களின் முன்னிலையில்,

பிரம்மாவின் ஆயுட்காலத்தில் இரண்டாவது பாதியில் உள்ள 50 வருடங்களில் முதல் வருடத்தில் முதல் மாதத்தில் முதல் பக்ஷத்தில் முதல் நாளில் பகலில் இரண்டாவது ஜாமம் மூன்றாவது முஹூர்த்தத்தில் ஏழாவதான வைவஸ்வத மன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது கலி யுகத்தில் முதல் கால்பகுதியில் -

(**அன்றன்றைய பஞ்சாங்க விவரங்கள் தெரிந்தால் கீழ்கண்ட பத்தியைத் தகுந்தவாறு மாற்றவேண்டும். இல்லையெனில் விட்டுவிடலாம்** - உலகில் நடைமுறையில் உள்ள பிரபவ முதலிய வருடங்களில் <u>விலம்ப</u> என்ற பெயர்கொண்ட வருடம், சூரியன் <u>தெற்கு</u> நோக்கி நகரும் <u>தக்ஷிண</u> அயனம், <u>வர்ஷ</u> ருது எனப்படும் <u>கார்</u> காலம், <u>புரட்டாசி</u> மாதம், <u>வளர்</u> பிறையாகிய <u>சுக்ல</u> பக்ஷம், <u>சதுர்த்தி</u> திதி, <u>வெள்ளிக்</u> கிழமை, <u>விசாகம்</u> நக்ஷத்ரம், <u>ப்ரீதி</u> யோகம், <u>வணிஜா</u> கரணம் கூடிய நேரத்தில்)

காவேரி புஷ்கரத்திற்குப் பிறகு, தேவ குருவான பிருஹஸ்பதி விருச்சிக ராசிக்கு வந்திருக்கும் புஷ்கர புண்ணிய காலத்தில் -

மஹாஜனங்களான எங்கள் அனைவருக்கும் வாழ்க்கையில் நஷ்டமின்மை, நிலைப்பெற்றிருக்கும் தன்மை, காரியங்களில் தெம்பு மற்றும் வெற்றி, ஆயுள், ஆரோக்யம், ஐச்வர்யம் ஆகியவை வளருவதற்கும், அறம் - பொருள் - இன்பம் - வீடு ஆகிய நான்கு பிறவிப்பயன்களும் கிடைப்பதற்கும், விருப்பங்கள் ஈடேறுவதற்கும், மக்களுக்கு தர்மத்திலேயே ஈடுபாடும் செயல்பாடும் ஏற்படுவதற்கும், தீய பழக்கங்கள் ஒழிந்து நல்ல பழக்கங்கள் பரவுவதற்கும், அதனால் மிக அதிகமான/குறைவான மழை இன்றி சரியான

மழை பொழிந்து கிணறு முதலிய நீர்நிலைகள் நிரம்புவதற்கும், கிளை நதிகளுடன் கூடிய தாமிரபரணி, காவேரி, பெண்ணையாறு (இரண்டும்), துங்கபத்ரை, க்ருஷ்ணை, கோதாவரி முதலிய நதிகளில் நல்ல பிரவாஹம் ஏற்படுவதற்கும், நீர்வளத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவதில் மக்களுக்கு சிரத்தை உண்டாகுவதற்கும், சுற்றுச்சூழல் மாசுகளை அகற்றுவதன் மூலம் பூமியில் உள்ள தாபம் குறைவதற்கும், அதன் மூலம் இந்த தேசத்தில் அனைத்து தானியங்களும், வைத்தியம் முதலிய குணங்கள் உடைய செடிகளும், நிழல் பழம் முதலியவற்றை அளிக்கும் மரங்களும் வளம் பெறுவதற்கும், பசுக்கள் முதலியவை பால் முதலியவற்றை நிரம்ப அளிப்பதற்கும், இஃதனைத்தாலும் இந்த தேச மக்கள் மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் வாழ்க்கையை நடத்துவதற்கும்,

1. இந்த புண்ணிய காலத்தை ஏற்படுத்தும் ராசி பெயர்ச்சியுடையவரும், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் குருவும், தங்க நிறத்தவரும், அறிவு மயமானவரும், மூவுலகின் நாயகருமான பகவான் பிருஹஸ்பதியையும்,

2. அவரது வேண்டுதலின்படி பிரம்மாவின் கமண்டலத்திலிருந்து வந்து "பிருஹஸ்பதியின் ஒவ்வொரு ராசி பெயர்ச்சியின் பொழுதும் வந்து தொடக்கத்தில் பன்னிரண்டு நாட்கள் முழுவதும், பிறகு நண்பகலில் நான்கு நாழிகை காலமும், பிறகு அடுத்த பெயர்ச்சிக்கு முன்பு பன்னிரண்டு நாட்கள் முழுவதும் நீர் மூன்றரை கோடி தீர்த்தங்களுடன் கூடினவராக எனது உத்தரவின்படி அந்தந்த நதிகளில் இருக்கவேண்டும்" என்ற பிரம்மாவின் வார்த்தைக்கிணங்க வந்திருக்கும் புஷ்கர அரசரையும்,

3. அந்த புஷ்கரருடன் கூடியவளும் "மங்களமானவளே! மஹா பாபங்களை அழிப்பவளே! தாமிரபரணி! உனக்கு வணக்கம். உன்னிடம் நீராடுகிறேன். என்னை பிறவிக்கடலிலிருந்து காப்பாயாக! மலயபர்வதத்தில் உருவானவளே! (தண்மையும் சந்தன வாசனையும் கொண்ட) தென்றலின் ஸஹோதரியே! காற்றினால் அசைக்கப்பட்ட அலைகளை உடையவளே! பெரும்பிராட்டியே! எனக்கு நன்மைகளை அளிப்பாயாக!" என்று பலவாறாக வேண்டப்படுபவளான அன்னை தாமிரபரணியையும்,

பூஜித்து, பிறகு புண்ணிய நீராடல், இயன்ற அளவு சாஸ்திரம் கூறிய தானங்கள் மற்றும் ஏனைய தர்ம காரியங்களைச் செய்கிறேன்!

-*-